தொழிற்சாலையைத் தனியார் எவரும் துவக்க முன்வந்தால், அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்திட மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ.கு. தமிழரசன்.

திரு. செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளிலே வாழ்கின்ற மக்களிலே 90 சதவீதம் பேர் மாட்டிறைச்சியை உணவாகப் பயன்படுத்துகிறார்கள். தென் மாநிலங்களிலேயே கேரள மாநிலம் மட்டும்தான் மாட்டிறைச்சியைப் பதப்படுத்தி, வெளிநாடுகளுக்கு அனுப்பி, ஒவ்வோர் ஆண்டும் மிகக் குறைந்தபட்சம் 500 கோடி ரூபாய் வரையிலே அன்னியச் செலாவணியைப் பெறுகிற மாநிலமாக இருக்கிறது. ஆகவே, தமிழ்நாட்டிலே இருந்து பல நேரங்களிலே, தமிழ்நாட்டின் எல்லையோரங்களிலே, கேரள எல்லையோரங்களிலே - இங்கேயிருந்து மாடுகள் கேரள மாநிலத்திற்குப் போவதும், அங்கேயிருந்து அவை இறைச்சியாகப் பதப்படுத்தப்பட்டு, வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதும் வழக்கமாக இருந்து வருவதால் மாநில எல்லையோரங்களிலே பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. ஆகவே, மாட்டிறைச்சியைப் பதப்படுத்தி அனுப்புவதற்கு அப்படிப்பட்ட தனியார் நிறுவனங்களுக்கோ அல்லது அரசு கூட்டு நிறுவனங்களுக்கோ தொழிற்சாலை தொடங்க அனுமதி கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா? பொள்ளாச்சியிலே ஒரு தனியார் நிறுவனம் இந்தத் தொழிற்சாலையைத் தொடங்க முன்வந்தது. அது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறதா என்பதைத் தங்கள்மூலம் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் அதற்குத் தகுந்த பதில் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கோழியோடு நில்லுங்கள். மாட்டுக்குப் போகாதீர்கள்! (சிரிப்பு) திரு. சுந்தரம்.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முனுசாமி அவர்கள் கோழியைப் பற்றிப்

2004 நவம்பர் 18]

பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர் தமிழரசன் அவர்கள் மாட்டைப் பற்றிப் பேசினார்கள். நான் ஆட்டைப் பற்றிப் பேசுகிறேன். *(சிரிப்பு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதைக் காலை நேரத்திலேயே ஆரம்பித்து வைத்துவிட்டீர்கள்! *(சிரிப்பு)*

திரு. பி.ஆர். சுந்தரம்: தற்போது ஆட்டு இறைச்சியைப் பொறுத்தவரையில் பதப்படுத்தப்பட்ட ஆட்டு இறைச்சிக்கு வெளிநாடுகளிலே நல்ல வரவேற்பு இருக்கின்றது. தமிழரசன் அவர்கள் கூறியதுபோல, பொள்ளாச்சியிலே அமைக்கப்படுவதாகக் கூறியிருந்த —தனியார்மூலம் அமைக்கப்படுவதாக இருந்தது மாட்டு இறைச்சிக்காக அல்ல, ஆட்டு இறைச்சிக்கு என்று நினைக்கின்றேன்—ஆட்டு இறைச்சியைத் தனியார்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். நல்ல இலாபம் கிடைக்கிறது. நிறைய அந்நிய முதலீடுகளும் வருகின்றன. ஆகவே, அதை மனதிலே வைத்துக்கொண்டு, ஆட்டு இறைச்சியை நமது தமிழக அரசு பதப்படுத்தி, வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தனிக் கேள்விப் போடவும். வினா எண் 23, திரு. ஜெக. வீரபாண்டியன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

23—

மருத்துவர் நியமனம்

*** 19517—திரு. ஜெக. வீரபாண்டியன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை அரசு கால்நடை மருத்துவமனையில் காலியாகவுள்ள மருத்துவர் பணியிடத்தை நிரப்பும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிரப்பப்படும்?

[2004 நவம்பர் 18

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை அரசு கால்நடை மருத்துவமனையில் காலியாக இருந்த கால்நடை மருத்துவர் பணியிடம் நிரப்பப்பட்டுள்ளது என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. ஜெக. வீரபாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியை 2002 ஆம் ஆண்டு கேட்டிருந்தேன். அந்தப் பணியிடம் நிரப்பப்பட்டுள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நன்றி. மயிலாடுதுறை தொகுதி மக்கள் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நியமனம் எப்போது செய்யப்பட்டது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10-6-2002 முதல் நிரப்பப்படாமல் இருந்துவந்த கால்நடை உதவி மருத்துவர் பதவி 1-9-2003 முதல் நிரப்பப்பட்டு, கால்நடை பெரு மருத்துவமனையில் சிகிச்சைப் பணிகள் எவ்வித இடையூறும் இல்லாமல் நடைபெற்று வருகின்றன. மயிலாடுதுறை கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர், மயிலாடுதுறை கால்நடை பெரு மருத்துவமனையின் பிரதம மருத்துவர் பதவியையும் கூடுதல் பொறுப்பில் கவனித்து வருகிறார். தற்போது இம் மருத்துவமனையில் பிரதம மருத்துவரோடு, கால்நடை உதவி மருத்துவர், கால்நடை பராமரிப்பு உதவியாளர் ஆகியோர் பணிபுரிந்து வருகிறார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. ஜெக. வீரபாண்டியன்.*

திரு. ஜெக. வீரபாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை கால்நடை மருத்துவமனைக்கு முறையாக பிரதம மருத்துவர் பதவி எப்போது நிரப்பப்படும்? அதுமட்டுமல்லாமல், இரண்டு கால்நடை உதவியாளர் பணியிடங்களும் நிரப்பப்படாமல் இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு தினசரி நிறைய கால்நடைகள் வருகின்றன. அந்தக் கால்நடை மருத்துவமனையில் உறைவிந்துக் குச்சிகள் இல்லையென்று சொல்கிறார்கள். அதையும் வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*